செய்தி வெளியீடு எண். 258 நாள்: 22.07.2021

**தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர். துணைத் தலைவர் மற்றும் ஆணையக்குழு உறுப்பினர்கள் 28.07.2021 அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளனர் - மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு.சா.பீட்டர் அல்போன்ஸ், துணைத் தலைவர் டாக்டர்.மஸ்தான் மற்றும் ஆணையக்குழு உறுப்பினர்கள் வருகின்ற 28.07.2021 அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளனர். சிறுபான்மையினர் சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகளையும் 28.07.2021 (புதன்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் சந்தித்து சிறுபான்மையினருக்கென தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து ஆலோசிக்கவும் கருத்துக்களை கேட்டறியவும் உள்ளனர்.

அவ்வமயம் சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் யாவரும் மாநில சிறுபான்மையினர் ஆணையக் குழுவினரை சந்தித்து தங்களது குறைகளையும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், சிறுபான்மையினர் நல மேம்பாட்டிற்கான தக்க கருத்துக்களையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.

ந2.∴16707∴.2021

# அலுவலககுறிப்பு

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**

பொருள்: சுற்றுப்பயணம் -மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் திரு.சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தலைமையில் 28.07.2021 அன்று திருவள்;ர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுதலை தெரிவித்து பத்திரிக்கைச் செய்தி வெளியிடுவது - தொடர்பாக

பார்வை: மாநில சிறுபான்மையினர் ஆணையம் சென்னை-2. அவர்களின் நே.மு.கடித எண்.அ1.∴189∴.2019 நாள்.15.07.2021

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு.சா.பீட்டர் அல்போன்ஸ், துணைத் தலைவர் திரு.டாக்டர்.மஸ்தான் மற்றும் ஆணையக்குழு உறுப்பினர்கள் வருகின்ற 28.07.2021 அன்று திருவள்;ர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளனர். சிறுபான்மையினர் சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள் பிரதிநிதிகளையும் 28.07.2021 (புதன் கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் சந்தித்து சிறுபான்மையினருக்கென தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து ஆலோசிக்கவும் கருத்துக்களை கேட்டறியவும் உள்ளனர் என்பதை தெரிவித்து அனைத்துப் பத்திரிக்கைகளிலும் செய்தி வெளியிட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வரைவு ஒன்று ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

மா.ஆ.த